# எருசலேமில் காத்திருத்தல்
# (1:12-26)

கடந்த பாடத்தில், அப்போஸ்தலருடைய நடபடிகள் முதல் அதிகாரமானது சபை நிறுவப்படுவதற்கு முன்பு தயாரிப்பு தேவையென்று கூறுவதை நாம் வலியுறுத்தினோம். அந்தத் தயாரிப்பின் இரு முக்கிய அம்சங்களை நாம் கவனித்தோம்: பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய வாக்குத்தத்தம், மற்றும் கிறிஸ்து திரும்ப வருதல் பற்றிய வாக்குத்தத்தம். இக்கட்டுரையில், சீஷர்களைத் தயாரிப்பதற்கு வேறு எவைகள் தேவையாயிருந்தன என்பதை நாம் பார்ப்போம். எருசலேமில் அப்போஸ்தலர்கள் காத்திருந்தபோது இந்தத் தயாரிப்பு நிலை நிகழ்ந்தது.

இயேசு, அப்போஸ்தலர்களிடத்தில், "மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது" என்றும், அவர்கள், "உன்னதத்திலிருந்து வரும் பலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" என்றும் கூறியிருந்தார் (லூக். 24:47, 49). மேலும், அவர்கள் தமது "சாட்சிகளாக" முதலாவது "எருசலேமில்" (1:8) இருப்பார்கள் என்றும் அவர் கூறியிருந்தார். இதில் இயேசுவின் சித்தம்பற்றிக் கேள்வி ஒன்றும் இல்லை: அப்போஸ்தலர்கள் எருசலேமில் இருக்கும்படி அவர் விரும்பினார்.

அப்போஸ்தலர்கள் சுயமாகத் தேர்வு செய்திருந்தால் எருசலேம் அநேகமாகக் கடைசி இடமாகத்தான் இருந்திருக்கும். இயேசு எருசலேமில்தான் சிலுவையிலறையப்பட்டார். அவர்களின் விரோதிகள் எருசலேமில்தான் இருந்தனர். அப்போஸ்தலர்களுக்கு எருசலேமில் எவ்விதக் கட்டுகளும் இருக்கவில்லை; அவர்களின் வீடுகளும், குடும்பங்களும் கலிலேயாவில் இருந்தன. இருப்பினும், இயேசு, அவர்கள் எருசலேமில் காத்திருக்க வேண்டும் என்று கூறினார், ஆகவே

*அப். 1:12, "அப்பொழுது அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாய் ஒரு ஓய்வு நாள் பிரயாண தூரத்தில் (ஏறக்குறைய முக்கால் மைல்) இருக்கிற ஒலிவமலை என்னப்பட்ட மலையிலிருந்து எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள்" என்று குறிப்பிடுகிறது.*

*இந்தியாவில், நாம் சுதந்திரப் பிரகடனத்தைப்பற்றிப் பெருமைப்படுகிறோம்.[1] இயேசு கட்டளையிட்டபடி அப்போஸ்தலர்கள் எருசலேமுக்குத் திரும்பியபோது, அவர்கள் ''ஆளுகையின் பிரகடனத்தை'' பாடிக்கொண்டிருந்தனர். எதுவாயிருப்பினும் - அவர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதில் முழுமையாகத் தங்களை ஒப்புக் கொடுத்திருந்தனர் - அவரையே முழுமையாக அவர்கள் சார்ந்திருந்தனர்!*

> *அவர்கள் அங்கே (எருசலேமுக்கு) வந்தபோது, மேல் வீட்டில் ஏறினார்கள்; அதில் பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும், பிலிப்பும், தோமாவும், பர்த்தொலோமேயும், மத்தேயும், அல்பேயுவின் குமார னாகிய யாக்கோபும், செலோத்தே[2] என்னப்பட்ட சீமோனும், யாக்கோபின் சகோதரனாகிய யூதாவும் (ததேயு) தங்கியிருந்தார்கள் (வ. 13).*

*புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்களின் பெயர்ப்பட்டியல் காணப்படுவதில் இது நான்காவதும், நிறைவான இடமும் ஆகும். (மத். 10, மாற். 3, லூக். 6ஐ வாசிக்கவும்). இப்பெயர்ப் பட்டியலில் உள்ள வித்தியாசம் என்னவென்றால், இதில் பதினோரு பெயர்கள்தான் உள்ளன; காட்டிக் கொடுத்த யூதாஸின் பெயர் இதில் காணப்படவில்லை.*

*வசனம் 13, அப்போஸ்தலர்கள் ஒரு மேல் வீட்டில் "தங்கி யிருந்தார்கள்" என்று குறிப்பிடுகிறது[3] (ஒருவேளை இது இயேசு வுடன் அவர்கள் கடைசி இராப்போஜனத்தில் கலந்து கொண்ட அதே மேல் வீடாக இருக்கலாம்).[4] இருப்பினும், சிலுவை மரணம் நிகழ்ந்து முடிந்தவுடனே பயத்துடன் இருண்ட அறையில் மறைந்து கொண்டிருந்ததுபோல (யோவா. 20:19) அவர்கள் இருக்கவில்லை. லூக்கா தமது சுவிசேஷத்தைப் பின்வருமாறு முடிக்கின்றார்: "அவர்கள் அவரைப் பணிந்து கொண்டு, மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பி வந்து, நாள் தோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து*

துதித்துக் கொண்டிருந்தார்கள்" (லூக். 24:52, 53). அப்போஸ்தலர் கள் தங்களின் நாட்களை தேவாலயத்தில் செலவிட்டனர் - தேவாலயத்தில் அவர்கள் ஒளிந்துகொள்ள முயற்சி செய்ய வில்லை. அவர்கள் தங்கள் குரல்களைத் தேவனிடத்தில் உயர்த் தினார்கள்!

அப்போஸ்தலர்களிடம் என்ன ஒரு மாற்றம் ஏற்பட் டிருந்தது - உயிர்த்தெழுந்த கர்த்தரிடத்தில் அவர்கள் விசுவாசம் கொண்டதினால் இந்த மாற்றம் உண்டாயிற்று!

## உறவுகள் பெலப்படுத்தப்படுதல் (1:12-14)

அப்போஸ்தலர்கள் தங்கள் நேரத்தை தேவாலயத்திலும், மேல் வீட்டிலும் செலவிடுகையில், தயாரிப்பின் மிகக் கடினமான பகுதிகளில் ஒன்றாகிய, காத்திருத்தல் என்பதில் நீடிய பொறுமையுடனிருந்தனர். நம்மில் அநேகர் காத்திருக்க விரும்புவதில்லை. தயாரிப்பு என்பதற்கு நேரம் ஆகலாம், ஆனால் நம்மில் அநேகர் அதற்காகும் நேரத்தைப்பற்றி உணர்வடைவதில்லை. இயேசு, "சில நாளுக்குள்ளே" (அப். 1:4) பரிசுத்த ஆவியானவர் வரப்போவதாகக் கூறியிருந்தார். ஆனால் அது வாரங்கள், மாதங்கள் அல்லது வருடங்களாகக்கூட இருக்க லாம்.[5] அவர்கள் காத்திருக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருந்தது, அவர்கள் காத்திருக்க விரும்பினார்கள். நாம் அனைவரும் இப்பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும்: "கர்த்தருக்காக காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத் துவார்; திடமனதாயிருந்து கர்த்தருக்கே காத்திரு" (சங். 27:14).

மற்றவர்களுடன் காத்திருப்பது பயனுள்ளதாய் இருக்கிறது. வசனம் 14ல், அப்போஸ்தலர்களுடன் காத்திருந்த மற்றவர்கள் யார் என்று கூறப்படுகிறது: "அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரிகளோடும், இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத் திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்." அடுத்த வசன மானது, ஒரு கூட்டத்தில் ஏறக்குறைய 120 தனி நபர்கள் இருந்தார்களென்று குறிப்பிடுகிறது.[6] அது எவ்வளவு உற்சாக முள்ள குழுவாயிருந்திருக்க வேண்டும்! அங்கே "பெண்கள்"

*இருந்தார்கள். அநேகமாக மரியாள் மற்றும் மார்த்தாள் ஆகியோரும் (லூக். 10:38), அப்போஸ்தலர்களின் மனைவி களும் (1 கொரி. 9:5), இயேசுவுக்கும், அவரைப் பின்பற்றியவர் களுக்கும் ஊழியம் செய்திருந்த பெண்களும் (மத். 27:55, 56; லூக். 8:2, 3), சிலுவையினடியில் இருந்த பெண்களும் (மாற். 15:40; யோவா. 19:25), இயேசுவின் சரீரத்திற்கு சுகந்த வர்க்கமிடும்படிக் கல்லறைக்குச் சென்றிருந்த பெண்களும் (லூக். 23:55; 24:10 இயேசுவின் சகோதரர்கள் இருந்தபடி யினால், சகோதரிகளும் இருந்திருக்கலாம்) இருந்திருக்க வேண்டும். இயேசுவின் தாயாகிய மரியாள் அங்கிருந்ததாகக் குறிப்பாக கூறப்படுகின்றது (வேத வசனங்களில் மரியாளைப் பற்றிக் குறிப்பிடப்படுவது இதுவே கடைசி முறையாகும்[7]).*

*அடுத்து, இயேசுவின் சகோதரர்கள் இப்பட்டியலில் இருக்கின்றனர். இயேசுவின் வாழ்நாள் காலங்களில், அவருடைய சகோதரர்கள் அவரில் விசுவாசம் கொள்ளவில்லை (யோவா. 7:5). இயேசு மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்ட பிறகு, தமது சகோதரர்களில் மூத்தவரான யாக்கோபுக்கு ஒரு விசேஷித்த உயிர்த்தெழுந்த தோற்றத்தைக் காட்டினார்.[8] யாக்கோபு, தாம் அறிந்துகொண்டவைகளைத் தமது மற்ற சகோதரர்களான யோசே, சீமோன் மற்றும் யூதா (மத். 13:55) ஆகியோரிடம் பகிர்ந்திருப்பார் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை. இப்போது அவர்கள் யாவரும் அப்போஸ்தலர் களுடன் சேர்ந்திருந்தனர்.*

*நாம் நன்கு அறிந்த மற்ற சிலர் - லாசரு, நிக்கொதேமு, அரிமத்தியா ஊர் யோசேப்பு, சகேயு - அங்கு இருந்திருக்கலாம். எவ்வளவு வசீகரமான ஒரு குழு! அவர்கள் காத்திருக்கையில் என்ன பேசினார்கள் என்று அறிய நீங்கள் விரும்பவில்லையா? நாளுக்கு நாள் வளர்ந்த உணர்வுகள்பற்றி நீங்கள் அறிய வில்லையா?*

*அவர்கள் காத்திருக்கையில், அவர்களை ஊடுருவிய ஒவ்வொன்றையும் நாம் அறியக் கூடாமல் போகலாம், ஆனால் அந்தச் சிறு குழுவினர் செய்த அநேக செயல்களை நாம் அறிந்துள்ளோம். ஒரு செயல்பாடு குறிப்பாக கூறப்படுகிறது: அவர்கள் ஜெபத்தில் தரித்திருந்தார்கள் (அப். 1:14). லூக். 24:53ல் அவர்கள் தேவனைத் துதித்தார்கள் என்று நமக்குக்*

கூறப்படுகிறது. சீஷர்கள் ஜெபித்ததாக இங்குதான் நாம் முதன்முறையாகப் படிக்கின்றோம்,[9] ஆனால் இது கடைசியாகி விடாது. அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலின் அனைத்துப் பக்கங்களிலும் ஜெபம் நிறைந்து காணப்படுகிறது.

அப்போஸ்தலர்களின் இன்னொரு செயல்பாடு, "ஒருமனப் பட்டு" என்ற வார்த்தையின் வழியே நமக்கு விளக்கப்படுகிறது: "அங்கே இவர்களெல்லாரும் .... ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்" (அப். 1:14). "ஒருமனப் பட்டு" என்ற சொல் தொடர், அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலில் ஆறுமுறை காணப்படுகிறது. காத்திருந்தவர் களைக் கவனியுங்கள். "ஒருமனம்" அல்லது இருதய ஐக்கியம் என்பது அவர்களுக்குள் தானாகவே ஏற்பட்டிருக்காது: அங்கிருந்தவர்களில் சிலர் இயேசுவின் மரணத்திற்கு சற்று முன்னதாக, மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்திருந்தனர் (லூக். 22:24). அவர்களில் பலர் கர்த்தரைக் கை விட்டிருந்தனர் அல்லது மறுதலித்திருந்தனர். (விரல்களால் சுட்டிக்காட்டுவது எவ்வளவு சுலபமாயிருந்திருக்கும்!) இயேசுவைப் பரியாசம் செய்திருந்த அவருடைய சகோதரர்கள், அவரைப் பின்பற்றி யிருந்தவர்களுடன் பக்கம் பக்கமாக அமர்ந்திருந்தனர். இந்தக் குழு "ஒருமனப்படுவதற்கு" சில கண்ணீர்த் துளிகள் சிந்தியிருக்க வேண்டும்; சில மேட்டிமையுணர்வுகள் விழுங்கப்பட்டிருக்க வேண்டும். உயிர்த்தெழுந்த கர்த்தரில் உள்ள விசுவாசத்தில் இந்த சீஷர்கள் ஐக்கியப்பட்டிருந்ததால் அவர்கள் இருதய ஐக்கியத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

நாம் "கர்த்தருக்காகக் காத்திருக்க" வேண்டிய வேளைகளில், நமக்கும் தேவனுக்கும் இடையிலும், நமக்கும், கிறிஸ்துவுக்குள் நமது சகோதரர்களுக்குமிடையிலும் உள்ள யாவற்றையும் நிச்சயமாய் சரி செய்து கொள்வதில் நேரத்தைச் செலவிடுவதைக் காட்டிலும் மேன்மையான வழி வேறில்லை.

## மாற்று நியமனம் ஒன்று உறுதி செய்யப்படுதல் (1:15-26)

காத்திருந்த வேளையில் அப்போஸ்தலர்களும் மற்றவர் களும், இன்னும் ஒரு பணியைச் செய்து முடிக்க வேண்டி

*யிருந்தது: யூதாஸுக்குப் பதிலாக மாற்று நியமனம் ஒன்றை அவர்கள் உறுதி செய்ய வேண்டியிருந்தது. 1:21, 22ல், பேதுரு "... ஒருவன் அவர் (இயேசு) உயிரோடெழுந்ததைக் குறித்து, எங்களுடனேகூடச் சாட்சியாக ஏற்படுத்தப்பட வேண்டும்" என்று கூறினார். பெந்தெகொஸ்தே நாளுக்கான தயாரிப்பில் இந்த மறுநியமனம் முக்கியமான பாகமாயிருந்தது.*

*இந்த மறுநியமனம் ஏன் அவசியமாயிருந்தது? இது ஒவ்வொரு அப்போஸ்தலரும் மரிக்கும்போது மறுநியமனம் செய்யப்பட வேண்டும் என்பதற்கான முன்னுதாரணம் அல்ல. யோவானின் சகோதரனாகிய யாக்கோபு கொலை செய்யப் பட்டபோது (அப். 12:2) அவருக்கு பதிலாக வேறொருவர் நியமிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படவில்லை. மாறாக, யூதாஸ் தன்னுடைய "ஊழியத்திலும் அப்போஸ்தலப் பட்டத்திலும்" இருந்து விலகி அதை "இழந்து போனபடியால்" (வ. 25) அவனுக்குப் பதிலாக மறுநியமனம் செய்ய வேண்டியதாயிற்று. யூதாஸ் மரித்துப்போனதால் அல்ல, ஆனால் அவன் விழுந்து போய் விட்டதால் மறுநியமனம் அவசியமாயிற்று.*

*அப்போஸ்தலர்களின் குழு பரிசுத்த ஆவியின் வருகையின் வேளையில், மறுபடியும் முழு பலம் பெற, பன்னிருவராயிருக்க, யூதாஸுக்குப் பதில் மறுநியமனம் செய்யவேண்டிய அவசரத் தேவையை அவர்கள் உணர்ந்தனர். "பெந்தெகொஸ்தே நாள் அன்று பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் இருக்க வேண்டியதின் அவசியம் என்ன?" என்று நாம் ஆச்சரியப்படலாம். "பத்து, பதினைந்து அல்லது இருபது பேருக்குப் பதிலாக முதலில் இயேசு பன்னிருவராக அப்போஸ்தலர்களைத் தெரிந்து கொண்டது ஏன்?" என்பது இன்னும் சிறந்த வினாவாக இருக்க முடியும். இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களுக்கு இணையாக இயேசு பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தெரிந்து கொண்டார் என்பது தெளிவு. இயேசு, தமது ஊழியத்தின் நாட்களில் தமது சீஷர்களுக்கும் கிடைக்கும் சிலாக்கியத்தைப்பற்றிப் பின்வருமாறு கூறினார்: "மறுஜென்ம காலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, என்னைப் பின் பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங் களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்*

*களின்மேல் வீற்றிருப்பீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத். 19:28). மறுபடியும், கடைசி இராப் போஜனத்தின்போது இயேசு தமது சீஷர்களிடம்,*

> *மேலும் எனக்கு நேரிட்ட சோதனைகளில் என்னோடேகூட நிலைத்திருந்தவர்கள் நீங்களே. ஆகையால், என் பிதா எனக்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினது போல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன். நீங்கள் என் ராஜ்யத்திலே என் பந்தியில் போஜனபானம்பண்ணி, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர் களாய்ச் சிங்காசனங்களின்மேல் உட்காருவீர்கள் என்றார் (லூக். 22:28-30).*

*நீங்கள் இந்த வசனங்களைப் பார்த்து, அப்போஸ்தலர்கள் எப்படி நியாயந்தீர்த்தார்கள் என்ற கேள்வியில் மூழ்கி விட வேண்டாம். (அடிப்படையாக, அவர்கள் போதித்த வசனங்களி னால் அவர்கள் நியாயந்தீர்த்தார்கள்.[10]) மாறாக, பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் பன்னிரண்டு சிங்காசனங்களின் மேலிருந்து பன்னிரண்டு கோத்திரங்களை நியாயந்தீர்த்துக் கொண்டிருப் பது வலியுறுத்தப்படுவதைக் கவனியுங்கள். இராஜ்யம் நிலைநாட்டப்படும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கையில், அப்போஸ்தலர்களின் எண்ணிக்கை திரும்பவும் பன்னிரண்டு[11] ஆக வேண்டியது மிக முக்கியமாயிருந்தது.*
*இவ்விதமாக நாம்,*

> *அந்நாட்களிலே, சீஷர்களில் ஏறக்குறைய நூற்றிருபது பேர் கூடியிருந்தபோது, அவர்கள் நடுவிலே பேதுரு எழுந்து நின்று, "சகோதரரே,[12] இயேசுவைப் பிடித்தவர் களுக்கு வழிகாட்டின யூதாஸைக்குறித்துப் பரிசுத்த ஆவி தாவீதின் வாக்கினால்[13] முன் சொன்ன வேத வாக்கியம் நிறைவேற வேண்டியதாயிருந்தது. அவன், எங்களில் ஒருவனாக எண்ணப்பட்டு, இந்த ஊழியத்திலே பங்கு பெற்றவனாயிருந்தான்" (அப். 1:15-17).*

*என்று வாசிக்கின்றோம். பேதுரு ஒரு தலைமைத்துவ இடத்திற்குத் திரும்பியிருந்தார். அவரது பயங்கரமான விழுந்து போகுதலுக்குப் பின்பு, அவர் இயேசுவினால் கலிலேயாக் கடற்கரையில் மறுபடியும் பழைய நிலைமைக்குக் கொண்டு*

வரப்பட்டார் (யோவா. 21:15-17).

யூதாஸ் உண்மையில் ஒரு அப்போஸ்தலனாக இருந்ததைப் பேதுரு வலியுறுத்தினார்: "அவன் எங்களில் ஒருவனாக (அவன் எங்கள் எண்ணிக்கையில் ஒருவனாக, NIV) எண்ணப்பட்டு, இந்த ஊழியத்திலே பங்கு பெற்றவனாயிருந்தான்.'' மற்ற எல்லா அப்போஸ்தலர்களையும் போலவே, யூதாஸும் தன்னுடைய திறமைகள் மற்றும் வல்லமை[14] இவற்றினால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மற்ற அப்போஸ்தலர்கள் பெற்றிருந்த எல்லா உரிமைகளையும், சிலாக்கியங்களையும் பெற்றிருந்தான். மற்றவர்கள் அசுத்த ஆவிகளைத் துரத்தவும், எல்லா வகையான வியாதிகளையும் குணப்படுத்தவும் கட்டளை பெற்றபோது, யூதாஸுக்கும் அது தரப்பட்டது (மத். 10:1). யூதாஸ் "ஆரம்ப முதலே சாத்தானாக இருந்தான்"[15] என்பது அவனது பிரச்சனையல்ல. அவன் தாழ்வில் ஆரம்பிக்கவுமில்லை, தாழ்வில் நிலைத்திருக்கவும் இல்லை. மாறாக அவன் உயர்வில் ஆரம்பித்து, பிறகு விழுந்தான்! இயேசுவைப் பின்பற்றுகின்ற ஒவ்வொருவருக்கும் இவ்விடத்தில் ஒரு எச்சரிப்பு உள்ளது (1 கொரி. 10:13).

வசனத்தின் இந்தப் பகுதியில் லூக்கா, தமது புறஜாதி வாசகர்களுக்காக, யூதாஸுக்கு என்ன நேர்ந்தது என்பதுபற்றிய பேதுருவின் வார்த்தைகளுடன் ஒரு விளக்கத்தைச் சேர்த்துத் தருகிறார்:[16]

> (அநீதத்தின் கூலியினால் [வெகுமதியினால், NIV] அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்து, தலை கீழாக விழுந்தான்; அவன் வயிறு வெடித்து, குடல்களெல்லாம் சரிந்துபோயிற்று. இது எருசலேமிலுள்ள குடிகள் யாவருக்கும் தெரிந்திருக்கிறது; அதனாலே அந்த நிலம் அவர்களுடைய பாஷையிலே இரத்த நிலம் என்று அர்த்தங்கொள்ளும் அக்கெல்தமா என்னப்பட்டிருக்கிறது) (வ. 18, 19).

யூதாஸின் மரணம் குறித்த இவ்விபரம் மத். 27:3-10ல் இருந்து சற்று மாறுபடுகிறது, ஆனாலும் இவ்விரு விபரங்களும் முரண்படுவதில்லை.[17] மாறாக, அவைகள் நிறைவை உண்டாக்குகின்றன; அவைகள் ஒன்றுக்கொன்று கூடுதல் விபரங்களைத் தருவதாயுள்ளன. இவை இரண்டையும் ஒன்று சேர்த்துப்

பார்க்கையில், இவைகள் மாபெரும் வல்லமையுடனிருந்த ஒருவனுடைய வாழ்க்கையின் பரிதாபகரமான முடிவைக் கூறுகின்றன: ஆழ்ந்த வருத்தத்தினால் நிறைந்த யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுப்பதற்காகக் கொடுக்கப்பட்ட (மத். 26:15) அந்த முப்பது வெள்ளிக்காசுகளையும் தேவாலயத்திலே எறிந்து விட்டு, புறப்பட்டுப்போய், நான்று கொண்டு செத்தான். இழிவான அவனுடைய சரீரம், புறக்கணிக்கப்பட்ட நிலையில், அந்தக் கயிறு அல்லது அதைப் போலுள்ள ஒரு பொருள் இற்றுப் போகும் வரையிலோ அல்லது அவனது சரீரம் சிதைவடையும் வரையிலோ தொங்கியது. பிறகு அவனது பிணமானது குயவனின் நிலத்தில்[18] இருந்த பாறையில் விழுந்து வெடித்தது, லூக்காவின் எழுத்துருவான விளக்கம் அழகற்றது, வெறுப்பூட்டுவதாய்க்கூட உள்ளது - அநேகமாக வேண்டுமென்றே அப்படி எழுதப்பட்டிருக்கலாம். கர்த்தரைக் காட்டிக் கொடுப்பதில் உள்ள இழிநிலையையும், அக்காட்டிக் கொடுத்தலின் விளைவுகளையும் கிறிஸ்தவர்கள் அறிய வேண்டும் என்று லூக்கா விரும்பினார்!

வசனம் 20ல் நாம் பேதுருவின் வார்த்தைகளுக்கு மறுபடியும் வருகின்றோம். பேதுரு "யூதாஸைக் குறித்துப் பரிசுத்த ஆவி தாவீதின் வாக்கினால் முன் சொன்ன வேத வாக்கியம் நிறைவேற வேண்டியதாயிருந்தது'' என்று வசனம் 16ல் கூறியிருந்தார். வசனம் 20ல் பேதுரு தமது சிந்தையிலிருந்த வசனப் பகுதிகளைக் கூறினார்: "சங்கீத புஸ்தகத்திலே: அவனுடைய வாசஸ்தலம் பாழாகக்கடவது, ஒருவனும் அதில் வாசம் பண்ணாதிருப்பானாக என்றும்; அவனுடைய கண்காணிப்பை (தலைமைத்துவ இடத்தை, NIV)[19] வேறோருவன் பெறக்கடவன் என்றும் எழுதியிருக்கிறது." சங்கீதம் 69:25ல் இருந்தும் சங்கீதம் 109:8ல் இருந்தும் தாவீதின் வார்த்தைகளைப் பேதுரு சுட்டிக்காட்டினார். இரண்டு சங்கீதங்களும், தலைமைத்துவப் பதவிகளிலிருந்த மனிதர்களாகிய தாவீதின் எதிரிகளைப்பற்றிக் கூறுகின்றது. இந்த மனிதர்கள் தாவீதுக்கு எதிராகத் திரும்பி, அவரை அரியணையிலிருந்து அகற்றித் தூக்கியெறிய முற்பட்டனர். இதற்கு மாறாக தேவன் அவர்களை நீக்கிப் போட்டு, அவ்விடங்களில் தேவ பக்தியுள்ள, தேவனைச் சார்ந்த தலைவர்களை நியமிக்கும்படி தாவீது ஜெபித்தார். தாவீது ஒரு

வகையான மேசியாவாக இருந்ததால், இவ்வசனப் பகுதிகள் இயேசுவை யூதாஸ் காட்டிக் கொடுப்பதை முன்னதாக நிழல்போலக் கூறுவதாகவும், யூதாஸுக்குப் பதில் நியமனம் தேவை[20] என்றும் பேதுரு கூறியிருக்க வேண்டும்.

பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களின்மேல் பொழியப்படுவதற்கு முன்பாக இது நடைபெற்றதால், யூதாஸுக்குப் பதிலாக ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்பதையும் பேதுரு எப்படி அறிந்தார்? என்ற கேள்வி எழுகின்றது. ஒருவேளை உயிர்த்தெழுதலுக்குப் பின்வந்த நாற்பது நாட்களில் இயேசு, "வேத வாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி அவர்களுடைய மனதை (அப்போஸ்தலர் களுடைய மனதை) த் திறந்த" (லூக். 24:45) போது அவர் இதை அறிந்திருக்கலாம். எப்படியிருப்பினும், தகவல்கள் வந்து சேர்ந்தது, மேலும் யூதாஸுக்குப் பதில் மறுநியமனம் செய்யப்பட வேண்டியவருக்கு இருக்க வேண்டிய தகுதிகளைப் பற்றியும் பேதுரு அறிந்திருந்தார்:

> ஆதலால், யோவான் ஞானஸ்நானங்கொடுத்த நாள் முதற்கொண்டு, கர்த்தராகிய இயேசுவானவர் நம்மிடத் திலிருந்து உயர எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக்கும், அவர் நம்மிடத்தில் சஞ்சரித்திருந்த காலங்களி லெல்லாம் எங்களுடனேகூட இருந்த மனுஷர்களில் ஒருவன் அவர் உயிரோடெழுந்ததைக் குறித்து, எங்களு டனே கூடச் சாட்சியாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்றான் (வ. 21, 22).

பேதுருவின் வார்த்தைகளில் மூன்று தகுதியாம்சங்கள் அடங்கியிருந்தன:[21] (1) அப்போஸ்தலர்களுடன் கூட இருந்த மனுஷர்களில் ஒருவர்தான் யூதாஸுக்குப் பதிலாக மறுநிய மனம் செய்யப்பட வேண்டியிருந்தது; ஒரு மனுஷியை (பெண்ணை) அவ்விடத்தில் நியமிக்கக் கூடாதிருந்தது.[22] சபையின் ஆரம்பமுதலே, ஆண்களின் தலைமைத்துவம் வலியுறுத்தப்பட்டது. (2) இயேசுவின் ஊழிய நாட்களி லெல்லாம் அவருடனும், அப்போஸ்தலர்களுடனும் அதிகமா கப் பயணம் செய்திருந்த ஒருவர்தான் யூதாஸுக்குப் பதில் மறுநியமனம் செய்யப்பட வேண்டியிருந்தது. இயேசுவுடன்

பன்னிருவர் மட்டும் பயணம் செய்திருக்கவில்லை; ஒருமுறை அவர் எழுபது பேரை பிரசங்கப் பயணமாக அனுப்பியிருந்தார் (லூக். 10:1). இயேசு உண்மையிலேயே உயிர்த்தெழுந்தார், அது ஒரு ஏமாற்று வேலையல்ல என்று அவர்கள் தரும் சாட்சியத்திற்கு நம்பிக்கையூட்டுவதே இந்தத் தகுதியின் நோக்கமாய் இருந்திருக்கக் கூடும். இயேசுவை நன்கு அறிந்தவர்களே, தாங்கள் இயேசுவையா அல்லது வேறோருவரையா, யாரைக் கண்டோம் என்று கூறுவதற்கு மிகச் சிறந்தத் தகுதியுடையவர்கள் ஆவர். (3) யூதாசுக்குப் பதிலாக மறுநியமனம் செய்யப்படுபவர் உயிர்த்தெழுதலுக்கு சாட்சியாக வேண்டும்.[23] வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், இயேசு மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்ட பிறகு அவரைப் பார்த்தவராக இருக்க வேண்டும். உயிர்த்தெழுந்த கர்த்தரைப் பலர் தரிசித்திருந்தனர் (1 கொரி. 15:6).

இரண்டு பேர் மட்டுமே மேற்கண்ட எல்லாத் தகுதிகளையும் கொண்டிருந்தனர்: "அப்பொழுது அவர்கள் பர்சபா[24] என்னப்பட்ட யோசேப்பும் (இவர் யுஸ்து[25] என்றும் அழைக்கப்பட்டார்), மத்தியாவும் ஆகிய இவ்விரண்டு பேரையும் நிறுத்தினர்" (வ. 23). வேத வசனங்கள் இவ்விரு மனிதர்களைப் பற்றியும்[26] வேறு எதையும் கூறுவதில்லை, ஆனால் இவ்விரண்டு பேரும் முதன்மையான சீஷர்களாய் இருந்திருக்க வேண்டும்.

யூதாசுக்குப் பதில் மறுநியமனம் செய்ய ஒரு மனிதர் மட்டுமே தேவைப்பட்டதாலும், இவ்விரு மனிதர்களும் தகுதியுள்ளவர்களாய் இருந்ததாலும் இவ்விஷயத்தை தேவனுடைய கரங்களில் ஒப்படைப்பதென்று முடிவு செய்யப்பட்டது:

> "எல்லாருடைய இருதயங்களையும் அறிந்திருக்கிற கர்த்தாவே, யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்குப் போகும்படி இழந்து போன இந்த ஊழியத்திலும் இந்த அப்போஸ்தலப் பட்டத்திலும் பங்கு பெறுவதற்காக, இவ்விரண்டு பேரில் தேவரீர் தெரிந்துகொண்டவனை எங்களுக்குக் காண்பித்தருளும்" என்று அவர்கள் ஜெபம் பண்ணினார்கள் (வ. 24, 25).

இந்தப் புத்தகத்தில் ஜெபம் என்று குறிப்பிடப்படுவது இது

*இரண்டாவது இடமாகும், மேலும் ஜெபத்தின் வார்த்தைகள் குறிப்பிடப்படுவது இதுவே முதலாவது இடமாகும். தேவன் kardiognosta அதாவது இருதயங்களை அறிந்திருக்கிறவர் என்று அழைக்கப்படுகிறார். ''மனுஷன் பார்க்கிறபடி தேவன் பார்க்கிறதில்லை; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்'' (1 சாமு. 16:7).*

*யூதாஸின் இறுதி அடைவிடம் எதுவென்பதற்கு நுட்பமான வழி கையாளப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்: ''யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்குப் போகும்படி இழந்து போனான்.'' "தனக்குரிய இடத்துக்குப் போகும்படி" என்றால் "ஒருவர் தனது செயல்களின் விளைவாக போகும்படித் தகுதி பெற்ற இடம்" என்று பொருளாகும். NIVயில் இது "அவனுக் குரிய இடத்துக்குப் போகும்படி" என்றுள்ளது. யூதாஸ் தனது அப்போஸ்தல ஊழியத்தை "இழந்துபோனபடியால்'' (மூல வார்த்தையின்படியாக, ''விழுந்துபோனபடியால்''), யூதாசுக் குரிய "சொந்த இடம்" எது என்பதில் நியாயமான சந்தேகங்கள் எதுவும் இருக்க முடியாது.[27] அதிகமான வாக்குத்தத்தங்கள் பெற்ற அவனது வாழ்க்கையின் முடிவு எவ்வளவு வருத்த மளிக்கக் கூடியதாயிருக்கிறது!*

*விழுந்துபோன யூதாசுக்குப் பதிலாக அவ்விருவரில் யார் மறுநியமனம் செய்யப்பட வேண்டியிருந்தது? அப்போஸ்தலர் களின்மேல் இன்னும் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வரா திருந்தபடியால், தேவனுடைய தேர்வை அவர்கள் எவ்விதம் அறிய வேண்டியிருந்தது? அங்கு பயன்படுத்தப்பட்ட முறை புதிராயுள்ளது: ''பின்பு, அவர்களைக் குறித்துச் சீட்டுப் போட்டார்கள்'' (வ. 26அ). மூல வசனத்தில் இது ''அவர் களுக்குச் சீட்டுக் கொடுத்தார்கள்''[28] என்றுள்ளது. சில மொழிபெயர்ப்புக்களில் "அவர்கள் சீட்டுப் போட்டார்கள்'' என்றுள்ளது. அது நடத்தப்பட்ட முறைபற்றிய நிச்சயமான தகவல் நாம் பெறுவதில்லை,[29] ஆனால் அது, இன்றைய நாட்களில் நாணயத்தைச் சுண்டிப்பார்ப்பது அல்லது தாயம் போட்டுப்பார்ப்பது போன்ற முறைகளுக்கு ஏறக்குறைய ஒப்பானதாயிருந்திருக்கலாம்.*

*அவர்கள் கையாண்ட முறைபற்றி நாம் நிச்சயமாய் அறியா விட்டாலும், இரு கருத்துக்கள் வலியுறுத்தப்பட வேண்டி*

*யுள்ளது: (1) "அவர்களுடைய சீட்டைக் கொடுத்தார்கள்" என்பது அங்கிருந்தவர்கள் அவ்விரு நபர்களுக்கும் வாக்குப் போட்டனர் என்று பொருள் படாது. அந்த இருவரின் இருதயங்களையும் தேவன் மட்டுமே அறிந்திருந்தார்; சீஷர்கள் அறியவில்லை. (2) "சீட்டுப் போட்டனர்" என்பது அங்கிருந்தவர்கள் அவ்விஷயத்தை விதி அல்லது வாய்ப்பு என்பதற்கு விட்டுவிட்டனர் என்றும் பொருள் படாது; மாறாக முடிவை அவர்கள் தேவனுடைய கரங்களில் ஒப்புவித்தனர்.*

*வேத வாக்கியங்களை அறியும்படிக்கு இயேசுவானவர், அப்போஸ்தலர்களுடைய "மனதைத் திறந்த" விஷயமானது (லூக். 24:45) யூதாசுக்குப் பதில் மறுநியமனம் செய்ததில் ஒரு பங்கு வகித்திருக்கலாம் என்ற சாத்தியக் கூறுபற்றி நான் ஏற்கனவே யோசனை கூறியிருந்தேன். ஒருவேளை இயேசுவே, இதற்கு அவர்கள் பயன்படுத்த வேண்டிய முறையையும் தந்திருக்கலாம், அல்லது அப்போஸ்தலருக்கு அந்த நடைமுறை பழக்கமானதினால் அவர்கள் அதைப் பயன்படுத்தியிருக்கலாம். பழைய ஏற்பாட்டில்[30] சீட்டுப் போடுதல் என்பது ஒரு பொதுவான பழக்கமாய் இருந்தது. இந்த முறைமையானது அப்போஸ்தலர்களின் நாட்களிலும்கூட ஆசாரியர்கள் என்ன பணி செய்ய வேண்டும் என்று தீர்மானம் செய்யப் பயன் படுத்தப்பட்டது (லூக். 1:9). பழைய ஏற்பாடு, "சீட்டு மடியிலே போடப்படும்; காரிய சித்தியோ கர்த்தரால் வரும்" (நீதி. 16:33) என்று கூறியது.*

*அப். 1ல் சீட்டுப் போடப்பட்டதைப்பற்றி நான் அதிகமாய் எதுவும் அறியவில்லை, ஆனால் இதை நான் அறிந்துள்ளேன்: பரிசுத்த ஆவியானவர் வந்த பிறகு, தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வதற்குக் கிறிஸ்தவர்களால் இந்த முறைமை ஒருபோதும் மறுபடி பயன்படுத்தப்படவில்லை! இது, "பழைய யுகத்தின் கடைசியான செயல்பாடாக இருந்தது" என்று ரிக் ஆட்ச்லீ கூறினார். ஆதி சபையில் மூப்பர்களையும், உதவிக்காரர் களையும் அவர்கள் இந்த முறைமையின்படி தேர்ந்து கொள்ள வில்லை (அப். 6; 1 தீமோ. 3; தீத்து 1). உபதேச விஷயங்களை அவர்கள் இந்த முறைமையின்படி சரி செய்து கொள்ளவில்லை (15:1-31). குழந்தைகள், யார் முதலில் சறுக்குப் பலகையில் விளையாடுவது அல்லது யாருக்கு முதல் கேக் துண்டைத்*

*தருவது என்பதற்கு சீட்டுப் போட்டுப் பார்ப்பது ஒருவேளை சரியாக இருக்கலாம், ஆனால் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வதற்கு இது இன்றைய வழிமுறை அல்ல. தேவனுடைய சித்தத்தைத் தீர்மானிக்க, நாம் அவரது ஆவியினால் ஏவப்பட்ட வசனங்களிடம் செல்ல வேண்டும். அப். 1ல், "சீட்டுப் போடப் பட்டது'' தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ள, தேவனால் அங்கீகரிக்கப்பட்ட தற்காலிகமான ஒரு முறைமை யாகும்; இந்நாட்களில் இது ஒரு மூட நம்பிக்கையாகும்![31]*

*இவ்விருவரில் தேவன் யாரைத் தெரிந்து கொண்டார்? "... சீட்டு மத்தியாவின் பேருக்கு விழுந்தது; அப்பொழுது அவன் பதினோரு அப்போஸ்தலருடனே சேர்த்துக் கொள்ளப் பட்டான்" (வ. 26ஆ). தேவன் தமது தெரிவைச் செய்தார்.[32] மத்தியா பன்னிரண்டாவது அப்போஸ்தலரானார். புதிய ஏற்பாட்டில் மத்தியாவின் பெயர் மறுபடியும் காணப்பட வில்லை, ஆனால் நமது பாடத்தில் "அப்போஸ்தலர்கள்" என்று நாம் படிக்கும் ஒவ்வொரு இடத்திலும் மத்தியா இருந்தார். பாரம்பரியத்தின்படி, அவர் எத்தியோப்பியாவுக்கு ஒரு ஊழியக்காரராகி, அங்கே வேத சாட்சியாக மரணமடைந் தார்.[33] இது உண்மையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், மற்ற அப்போஸ்தலர்களைப் போலவே அவரும், ''எருச லேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும்" இயேசுவுக்குச் சாட்சியானார் (அப். 1:8).*

*அப்போஸ்தலர்களின் முழுமையான எண்ணிக்கை பன்னிரெண்டாக (அப். 6:2) மறுபடியும் பழைய நிலைக்குக் கொண்டுவரப்பட்டது. தயாரிப்பு முடிந்தது. ஒவ்வொன்றும் ஆயத்தமாயிருந்தது. பரிசுத்த ஆவியானவர் வருவதற்கான வேளையாயிற்று!*

## முடிவுரை

*அப். 2ல் உள்ள மாபெரும் சம்பவங்களுக்கு நடத்திச் செல்ல தயாரிப்பு தேவையானதுபோல, தேவன் நம்மைப் பயன் படுத்தும்படி, நாம் நமது இருதயங்கள், சிந்தனைகள், மற்றும் வாழ்க்கை இவற்றை ஆயத்தம் செய்ய வேண்டியது தேவையா யுள்ளது. பாவத்தில் இழந்துபோன உலகம்பற்றிய ஒரு*

*கண்ணோக்கம் நமக்குத் தேவை. இழந்துபோனவர்கள் இரட்சிக்கப்படும்படியாக எப்பொழுதும் கொழுந்துவிட்டு எரியும் ஆர்வம் நமக்குத் தேவை. இதைவிட சீக்கிரமாய் நாம் எப்பொழுதும் ஆயத்தம் செய்ய முடியாது; நம்மை ஆயத்தப் படுத்துவதைப் பிறகு எப்போதாவது பார்த்துக் கொள்ளலாம் என்று அசட்டை செய்யவும் முடியாது.*

*நமது வாழ்க்கை தேவனுக்கு முன்பாக சரியாக இருக்கிறது என்று நிச்சயித்துக் கொள்வதே நாம் செய்யக்கூடிய மிக முக்கியமான தயாரிப்பு ஆகும். நீங்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய வேண்டியது தேவையா? தவறு செய்யும் தேவனுடைய பிள்ளையாயிருந்து நீங்கள் மறுபடியும் பழைய நிலைக்கு வர வேண்டியது தேவையா? அதைச் செய்யாமல் விட்டு விடாதீர்கள்.*

---

*குறிப்புகள்*

*[1]இந்த புகழ்பெற்ற பிரகடனம் 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி துவங்கிய நள்ளிரவு 12.00 மணிக்கு சுதந்திர இந்தியத் தலைவர்களால் அறிவிக்கப்பட்டது. ஆங்கிலேய அடிமைத்தனத்தில் அநேக ஆண்டுகள் அல்லல்பட்ட நம் தேசத்திற்கு, அறவழியில் போராட்டங்கள் நிகழ்த்தி, அரும்பாடுபட்டு இந்த சுதந்திரத்தை நமது தலைவர்கள் பெற்றுத் தந்தனர். [2]செலோத்தே என்பவர்கள், ரோம அரசாங்கத்தைத் தூக்கி எறியும்படி தங்களை ஒப்புக் கொடுத்த ஒரு குழுவினர் ஆவர். ரோம அரசாங்கத்தில் முன்பு வேலை செய்த ஒருவரும் (ஆயக்காரன் மத்தேயு), முன்பு தீவீரவாதி (செலோத்தே)யாக இருந்த ஒருவரும் ஒன்றிணைந்து ஊழியம் செய்தது என்பது, மக்களை ஐக்கியப்படுத்தும் கர்த்தருடைய வல்லமையைக் காட்டுகிறது. [3]லூக். 24:53ன் அடிப்படையில், "தங்கியிருந்தார்கள்" என்பது அவர்கள் தங்கள் பொருட்களை வைக்கவும், இரவு நேரங்களில் ஓய்வெடுக்கவும், சில வேளை உணவு அருந்தவும் பயன்பட்ட இடமாகும் என்பது தெளிவாகும். லூக். 24:53ல், பகல் நேரத்தில் அவர்கள் "நாடோறும் தேவாலத்திலே" இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. பொதுவாக 1:14ல் குறிப்பிடப்படுபவர்கள் மற்றும் 1:15ல் குறிப்பிடப்பட்டுள்ள 120 பேர் ஆகிய அனைவரும் மேல் வீட்டில் தங்கியிருந்ததாக அநுமானிக்கப்படுகிறது, ஆனால் வசனம் இதைக் கூறுவதில்லை. மாறாக 1:14ல் அப்போஸ்தலர்கள், குறிப்பிட்ட மற்ற சிலருடன் ஜெபித்துக் கொண்டிருந்ததாகக் கூறப் படுகிறது. அப்போஸ்தலர்கள் தொடர்ந்து தேவாலயத்தில் இருந்ததால், இந்த ஜெபங்கள் தேவாலயத்தில் நடைபெற்றிருக்கலாம். மேலும், அப். 1:15ல் சொல்லப்படும் கூட்டமானது தேவாலயத்தின் தங்கும் அறை ஒன்றில் நடைபெற்றிருக்கலாம். [4]மற்ற சிலர் இது யோவான் மாற்குவின்*

*தாயாருடைய வீடாயிருக்கும் என்று யூகிக்கின்றனர் (12:12). [5]மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக, இயேசு, பரலோக ராஜ்யம் "சமீபித்திருக்கிறது" என்று கூறியிருந்தார், ஆனால் அது இன்னமும் வந்திருக்கவில்லை. [6]இயேசு, "ஐநூறு பேருக்கும் அதிகமான சகோதரருக்கு ஒரே வேளையில் தரிசனமானதால்" (1 கொரி. 15:6), இந்த 120 பேர், இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றியவர்களில் எஞ்சியிருந்த அனைவருமாகிவிட மாட்டார்கள். மற்றவர்கள் அநேகமாக கலிலேயாவில் இருந்திருப்பார்கள். [7]ஒரு முன்னாள் பாரம்பரியத்தின்படி, மரியாள், அப்போஸ்தலராகிய யோவானுடன் பின்னாட்களில் எபேசு பட்டணத்திற்குச் சென்று அங்கேயே மரித்தார்கள். [8]1 கொரி. 15:7. யாக்கோபு, இயேசுவின் அரை சகோதரர் ஆவார். அவர்கள் ஒரே தாயாரை (மரியாள்) உடையவர்களாயிருந்தார்கள், ஆனால் ஒரே தகப்பன் அவர்களுக்கில்லை (தேவனே இயேசுவின் தகப்பன்; யோசேப்பு, யாக்கோபின் தகப்பன்). இந்த யாக்கோபு எருசலேம் சபைக்கு "ஒரு தூணாக" எண்ணப்பட்டார் (கலா. 2:9), மேலும் அவர் யாக்கோபு எழுதின நிருபம் என்பதை எழுதியிருக்கிறார். [9]சீஷர்கள், இயேசுவிடம் ஜெபிக்கக் கற்றுத் தரும்படிக் கேட்டார்கள் (லூக். 11:1), எனவே அவர்கள் ஜெபித்திருப்பார்கள் என்று நாம் யூகிக்க முடிகிறது. ஆயினும், கிறிஸ்துவின் ஊழிய நாட்களில், அவர்கள் ஜெபம் செய்ததுபற்றிய பதிவேடுகள் எதுவும் இல்லை. மாற். 14:38-40ல் இயேசு அவர்களை ஜெபம் செய்யும்படி கேட்டுக் கொண்டபோது, அவர்கள் தூங்கி விழுந்தனர்! [10]இயேசு, அவரை ஏற்றுக் கொள்ள மறுக்கிறவர்களை அவருடைய வசனமே நியாயந்தீர்க்கும் என்றார் (யோவா. 12:48). இது அவர் தமது அப்போஸ்தலர்களுக்கு வெளிப்படுத்திய சத்திய வசனமாகும் (யோவா. 16:13).*

*[11]இராஜ்யம்/சபை ஸ்தாபிக்கப்பட்ட பிறகு, அப்போஸ்தலர்கள் மரிக்கையில், ஒரு வகையில் அவர்கள் தங்கள் அரியணைகளில் அமர்ந்து இயேசுவோடு ஆளுகை செய்யத் தொடங்கினர் - பன்னிரண்டு கோத்திரங் களில், கர்த்தரை ஏற்றுக்கொள்ள மறுத்தவர்களை நியாயந்தீர்க்கத் தொடங்கினர். அவர்களுக்குப் பதிலாக மாற்று நியமனம் தேவைப்பட வில்லை. [12]"சகோதரர்" என்ற வார்த்தை இருமுறை - வசனம் 15ல் ஒரு முறை மற்றும் வசனம் 16ல் ஒரு முறை - பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் புத்தகத்தில் இவ்வார்த்தை இவ்விடங்களில் தான் முதன்முறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. [13]வேத வசனங்களின் ஏவுதல்பற்றிய ஒரு பலமான வசன பகுதியாக இது விளங்குகிறது. [14]சிலர், இயேசுவைக் காட்டிக் கொடுப்பது என்ற குறிப்பிட்ட நோக்கத்திற்காகவே யூதாஸ் தெரிந்து கொள்ளப்பட்டான் என்கின்றனர். அப்படியானால் கிறிஸ்துவை மறுதலிப் பதற்காகவே பேதுரு தெரிந்து கொள்ளப்பட்டாரா? மற்ற அனைவரும், தங்களுக்குள் யார் பெரியவன் என்று வாக்குவாதம் பண்ணுவதற்காகவே தெரிந்துகொள்ளப்பட்டார்களா? அவர்கள் எப்படியிருந்தனர் என்பதற்காக அல்ல, மாறாக அவர்கள் எப்படியிருக்கக் கூடும் என்பதற்காகவே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இயேசு, அவர்களுடைய பலவீனங்களை அறிந்திருந்தார், ஆனால் அவர்களுடைய வல்லமைகளையும் அவர் பார்த்தார். மற்றவர்களுக்குப் போலவே யூதாஸின் விஷயத்திலும் இது உண்மையாகும். யூதாஸ் மாபெரும் வல்லமை உடையவனாய் இருந்தமைக் கான ஒவ்வொரு குறிப்பும் நாம் பெற்றுள்ளோம். யூதேயாவிலிருந்து அவன்*

வந்ததினால், கலிலேயாவிலிருந்து (1:11) வந்திருந்த மற்ற அப்போஸ்தலர் களைக் காட்டிலும் அவன் அதிகம் கல்வி கற்றவனாயிருந்திருக்கலாம். இயேசு அவனுக்குக் காண்பித்த மரியாதையானது, அவர்கள் அனைவருக்கு மான பணப்பையை அவன் வைத்திருக்கும்படிப் பொறுப்பை ஒப்படைத் திருந்த உண்மையின் மூலம் நிரூபணமாகிறது (யோவா. 12:6; 13:29). [15]"ஆரம்ப முதலே சாத்தானாயிருந்தான்" என்ற சொல் தொடரானது, தேவனுடைய பிள்ளை கிருபையினின்று விழவே முடியாது என்று நம்புகின்ற சிலரால் பயன்படுத்தப்படுகிறது. இயேசு, யூதாஸை "சாத்தான்" என்று குறிப்பிட்டார் (யோவா. 6:70, 71), ஆனால் அவர் பேதுருவையும் "சாத்தான்" என்றார் (மாற். 8:33); இவ்விரண்டு விளக்கங்களும் அவர்கள், சாத்தான் தங்களைப் பயன்படுத்தும்படி அனுமதித்ததையே குறிப்பிடுகின்றது. இயேசுவைக் காட்டிக் கொடுக்கும்படியான எண்ணத்தை சாத்தான், யூதாசின் இருதயத்தில் தூண்டியதாக வேதாகமம் கூறுகிறது, "... சாத்தான் அவனுக்குள் புகுந்தான்" (யோவா. 13:2, 27), ஆனால் யூதாஸ் "ஆரம்ப முதலே சாத்தானாக இருந்தான்" என்று அது கூறுவதில்லை. [16]பல நவீன மொழிபெயர்ப்புகள் 18 மற்றும் 19 ஆகிய வசனங்களை அடைப்புக் குறிகளுக்குள் இட்டு, இந்த விளக்கத்தைச் சுட்டிக்காட்டுகின்றனர். KJVயில் அப்படிப்பட்ட அடைப்புக் குறிகள் இவ்விடத்தில் இல்லை, ஆனால் இவ்வசனங்களின் சொற்கள், அவைகளைப் பேதுரு பேசவில்லை என்று தெளிவாக்குகின்றன. யூதாசுக்கு என்ன நடந்தது என்று பேதுரு அங்கிருந்தவர்களுக்கு விளக்க வேண்டியிருந்திருக்காது. பேதுரு, அரமாயிக் மொழியை "அவர்களுடைய பாஷையிலே" என்று ஒரு பொழுதும் குறிப்பிட்டு இருக்கமாட்டார். பேதுரு, தனது பிரசங்கத்தைக் கேட்டவர் களிடம் "அக்கெல்தமா" என்ற வார்த்தையின் பொருளை விளக்கிக் கூறுவது தேவையற்றது. [17]வேதாகமம் தேவனிடத்திலிருந்து வந்தது என்பதை நம்பாதவர்கள் அநேக வேளைகளில் இவ்விரு விபரங்களையும், "வேதாகமம் தன்னிலே முரண்படுகிறது" என்று "நிரூபிக்க" பயன்படுத்து கின்றனர். எப்படியிருப்பினும், இவ்விரு விபரங்களுமே, ஒன்றில் இல்லாததை இன்னொன்று சுருக்கமாய் விளக்குவதாய் அமைந்துள்ளன. உதாரணமாக, மத். 27:6, 7ல் ஆசாரியர்கள் அந்த நிலத்தை வாங்கினார்கள் என்று சொல்லப்படுகையில், அப். 1ல் யூதாஸ் அந்த நிலத்தைச் சம்பாதித்தான் என்று சொல்லுகிறது. இவ்விரு விபரங்களையும் ஒன்று கூட்டிப் பார்க்கையில், நாம் பின்வருமாறு காண்கிறோம்: யூதாசின் பணத்தை கொண்டு ஆசாரியர்கள் அந்த நிலத்தை வாங்கினர்; இவ்விதமாக அந்த நிலம் சட்டப் பூர்வமாக யூதாசுக்கு சொந்தமாயிற்று. மறுபடியும், மத். 27:8, அந்த நிலம் இரத்தக் கிரயத்தினால் வாங்கப்பட்டதாயிருந்ததால் "இரத்த நிலம்" என்று அழைக்கப்பட்டதாகக் கூறுகிறது, அப். 1ல் அந்த நிலம் யூதாஸின் இரத்தத்தினால் நனைந்ததால் "இரத்த நிலம்" என்று அழைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவ்விரண்டு விபரங்களையும் ஒன்று கூட்டிப்பார்க்கையில், நாம் பின்வருமாறு காண்கின்றோம்: அந்த நிலம் இரத்த நிலம் என்று அழைக்கப்பட்டதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. அவற்றில் ஒன்றை மத்தேயு தருகையில் இன்னொன்றை லூக்கா தருகிறார். [18]குயவனின் நிலம் என்பது மண் பாத்திரங்கள் செய்பவனுக்குச் சொந்தமான நிலம் ஆகும். அவன் அந்த நிலத்திலிருக்கும் மண்ணை எடுத்துப் பானைகள்

செய்யப் பயன்படுத்துவான். ஒரு நிலத்தில் உள்ள மண் அனைத்தும் இவ்வாறு எடுக்கப்பட்ட பிறகு அந்த நிலம் அடிப்படையாகப் பயனற்ற தாகிவிடுகிறது. (இந்நாட்களில் சுரங்கம் வெட்டும் பகுதிகள் உள்ள நிலங்களை ஒப்பிடவும்.) இத்துடன், யூதாசின் சிதைந்த உடலும் அந்நிலத்தில் சிதறியதால், அந்நிலத்தின் மதிப்பு மிகவும் குறைந்திருக்கும், அதை முப்பது வெள்ளிக் காசுக்கு வாங்கியிருக்க முடியும். இன்றைய நாட்களில், வறியவர்களைப் புதைக்குமிடம் "குயவனின் நிலம்" என்று அழைக்கப்படுகிறது. இச்சொல் வழக்கு மத்தேயு 27:7லிருந்து வருகிறது. [19]KJVயில் இது "அவனுடைய ஆயத்துவத்தை" என்றுள்ளது, இது "episkopos" அல்லது "overseer" என்ற கிரேக்க மூல வார்த்தையின் மொழிபெயர்ப்பாகும். "அவனுடைய கண்காணிப்பு" என்பது மூலத்தைப் பின்பற்றிய மொழி பெயர்ப்பாகும். எளிய ஆங்கில வேதாகமத்தில் "அவனுடைய கண் காணிப்புப் பணியை" என்றுள்ளது. [20]சில தீர்க்கதரிசனங்கள் எதிர்கால நிகழ்ச்சிகளை எளிமையாகக் கூறுகின்றன (2:16ஐக் காண்க). மற்றவைகள் எடுத்துக்காட்டுகளிலும் மற்றும் நிழலாட்டங்களிலும் எதிர்காலத்தை முன்னுரைத்தன (எபி. 8:5; 10:1). எது தீர்க்கதரிசனம் என்றோ, எது தீர்க்கதரிசனம் இல்லையென்றோ அல்லது தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம் எது என்றோ விளக்கமளிக்கும் உரிமையை நானோ, நீங்களோ பெற்றிருக் கவில்லை. இதற்கு மாறாக, "பரிசுத்த ஆவியானவர் எப்படி விரும்புகின் றாரோ அப்படி அவர் தம்மை விளக்கப்படுத்தக்கூடும்" (ஆன்ட்டனி லீ ஆஷ், "அப்போஸ்தலர்களின் நடபடிகள்," பாகம் 1, ஜீவனுள்ள வசனத்தின் விளக்கவுரை, ed. எவரெட் ஃபெர்குஸன் [ஆஸ்டின், டெக்ஸாஸ்: ஸ்வீட் பப்ளிஷிங் கோ., 1979], 34).


[21]அநேக நாமகரணக் கூட்டங்களில், பன்னிரண்டு அப்போஸ்தலர் களின் வாரிசுகளாக தங்களைக் கூறிக் கொள்பவர்கள் இன்றும் உள்ளனர். ஆனால் இந்தத் தகுதிகளை அவர்கள் கொண்டிருப்பதில்லை! [22]மூல பாஷையில் வசனம் 1:21ல் பொதுப்பால் பெயர்ச் சொல்லான anthropos என்ற சொல்லில் பயன்படுத்தப்படவில்லை, ஆனால் aner என்ற குறிப்புப் பெயர்ச் சொல்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது ("ஒரு மனிதர்" என்ற சொல் "ஒரு மனுஷி" என்ற சொல்லில் இருந்து மாறுபடுகிறது). [23]இத்தகுதியைப் பொறுத்தமட்டில், சாட்சி ஒருவருக்கு "பின்வரும் சந்ததி" யைப் பெற்றிருப்பது என்பது முடியாத செயல் ஆகும்! இன்று இத்தகுதிகளை யுடையவர்கள் ஒருவரும் இல்லையென்று மறுபடியும் சொல்லுகிறோம். [24]"பர்சபா" என்பது மூலத்தில் "சபாவின் மகன்" என்று பொருள்படுகிறது. ஒருவேளை இந்தப் பெயர் "சபாத்(ஓய்வு நாளின்)தின் மகன்" என்று பொருள் படலாம். ஒருவேளை இந்த மனிதர் ஓய்வு நாளன்று பிறந்ததினால் இப்பட்டப் பெயர் அவருக்குத் தரப்பட்டிருக்கலாம் இதே பட்டப் பெயர் கொண்ட இன்னொரு மனிதர் 15:22ல் குறிப்பிடப்படுகிறார். இது ஒரு பொதுவான பட்டப் பெயராக இருந்திருக்கலாம் (அமெரிக்க நாட்டில் "Shorty" அல்லது "Red" அல்லது இது போன்ற வேறு அநேகம் பெயர்கள் நடைமுறையில் உள்ளன); இவ்விரு மனிதர்களும் உறவினர்களாயிருந்தனர் என்று நம்புவதற்கு எவ்வித காரணமும் இல்லை. [25]"யோசேப்பு" என்பது அவரது எபிரெய பெயராகவும், "யுஸ்து" என்பது அவரது கிரேக்கப் பெயராகவும் இருந்தது. மக்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்களைப்

பெற்றிருப்பது பொதுவான வழக்கமாயிருந்தது. [26]யோசேப்பு பர்சபாவைக் குறித்துப் பல்வேறு பாரம்பரிய வரலாறுகள் நிலவுகின்றன. ஒன்று, அவர் பாம்பின் விஷத்தை அருந்தியும் பாதிக்கப்படாமலிருந்ததாகக் கூறுகிறது. இன்னொன்று, அவர் நீரோ இராயனால் சிறையில் அடைக்கப்பட்டு, பின்னால் விடுவிக்கப்பட்டதாகக் கூறுகிறது. ஆயினும், வேத வசனங்களில் அவரைப்பற்றி அதிகமாக ஒன்றும் சொல்லப்படவில்லை. இவரைப்பற்றி, லூக்காவின் முழுமையான அடையாளக் குறிப்புகளில் இருந்து, பன்னிருவரில் ஒருவராக தேர்வு செய்யப்படாவிட்டாலும், ஆதி சபையில் இவர் கீர்த்தி பெற்றவரானார் என்று நாம் முடிவுக்கு வர முடியும். இங்கு ஒரு பாடம் உள்ளது: யோசேப்பு பர்சபா அப்போஸ்தலராகத் தெரிவு செய்யப்படாதபோது, அவர் கோபமடைந்து வெளியேறிவிடவில்லை! [27]சமீபத்திய ஆண்டுகளில், யூதாஸ் அநேகமாய் இரட்சிக்கப்பட்டிருப்பான் என்று எண்ணுவதை விரும்பும் அநேகரை நான் சந்தித்திருக்கிறேன். ஒரு நபர், யூதாஸ் காட்டிக் கொடுத்த நிகழ்ச்சி முன்னுரைக்கப்பட்டதால், அவன் அதற்குப் பொறுப்பேற்க முடியாது என்று வலியுறுத்தினார். ஆயினும், அதிகாரம் 2ல், பேதுரு யூதர்களிடத்தில் இயேசுவின் மரணம் முன்னு ரைக்கப்பட்டதென்று கூறினார், இருப்பினும் அவர்களே இன்னமும் அதற்குப் பொறுப்பாளிகளாயிருந்தனர். யூதாசைக் குறித்த இயேசுவின் கூற்று, அவனது முடிவைப்பற்றிய எஞ்சியுள்ள நமது சந்தேகங்களையும் போக்குகிறது. மத். 26:24; யோவா. 17:12ஐக் காண்க. [28]KJVயில் “அவர்களுடைய சீட்டுகளை அவர்களுக்குக் கொடுத்தார்கள்” என்றுள்ளது. புதிய நூற்றாண்டு வேதாகமத்தில் “அவர்கள் சீட்டுகளைப் பயன்படுத்தினர்” என்றுள்ளது. [29]இந்த முறைமையைப்பற்றி விளக்கவுரையில் அநேக ஆலோசனைகள் தரப்பட்டுள்ளன. வெள்ளை மற்றும் கருப்புக் கற்கள் கொண்ட முறைகள் பயன்பட்டதாக சிலர் ஆலோசிக்கின்றனர். ஆசாரியர் களால் பயன்படுத்தப்பட்ட ஊரிம் மற்றும் தும்மீம் ஆகியவைகளுக்கு இணையானவை அங்கு குலுக்கப்பட்டிருக்கலாம் என்று சிலர் ஆலோசிக் கின்றனர். இவையாவும் யூகங்களே. எப்படியிருப்பினும், வசனப்பகுதி, “அவர்கள் சீட்டுப் போட்டனர்” என்று கூறுவதால், ஒரு நபர் “குலுக்கும்” அல்லது “போடும்” எந்த சீட்டு முறைமையையும் நாம் இந்த யூகங்களில் இருந்து அநேகமாக நீக்கி விட முடியும். [30]லேவி. 16:8; எண். 26:56. மேலும் யோசுவா 7ம் அதிகாரமானது இந்த முறைமை பயன்பட்ட ஒரு சந்தர்ப்பத்தைக் கூறுவதாகலாம். சிலர் பிரதான ஆசாரியர்கள் பயன்படுத்தும் ஊரிம், தும்மீம் ஆகியவைகளையும் இதில் உள்ளடக்கக் கூடும்.

[31]தேவனுடைய வசனங்களில் கூறப்படாத சிலவற்றில் நாம் முடிவு எடுக்க வேண்டியிருந்தாலும், அவருடைய சித்தத்தை அறிந்து கொள்ள அவரால் அங்கீகரிக்கப்பட்ட, பக்குவமுள்ள கிறிஸ்தவரிடம் பேசுதல் அல்லது ‘‘திறந்த வாசல்களுக்காக’’ காத்திருத்தல் (1 கொரி. 16:9) போன்ற முறைமைகள் உள்ளன. முக்கியமான முடிவுகளை சந்தர்ப்பத்திற்கு விட்டுவிடுவதென்பது, முடிவெடுக்கும் நமது பொறுப்பில் இருந்து தப்பிப்பது ஆகும். [32]மத்தியாவைத் தெரிந்து கொள்ளுவதில் அப்போஸ்தலர்கள் தவறு செய்து விட்டதாகச் சிலர் விந்தையான நம்பிக்கை கொண்டுள்ளனர். அவர்கள், பவுலைப் பன்னிரண்டாவது அப்போஸ்தலராகும்படி தேவன் விரும்பியதாக வலியுறுத்துகின்றனர். ஆயினும் பேதுருவால் முன் வைக்கப்

பட்ட தகுதியாம்சங்கள் பவுலிடம் இல்லை (இயேசுவின் சீஷராக அவருடன் பவுல் பிரயாணம் செய்திருக்கவில்லை). பவுல் (தமது பெரும்பாலான நிருபங்களின் தொடக்கத்தில் அவரே வலியுறுத்துவதுபோல) ஒரு அப்போஸ் தலராகவே இருந்தார், ஆனால் அவர் ஒரு விசேஷித்த அப்போஸ்தலராக - புறஜாதிகளுக்கான அப்போஸ்தலராகவே இருந்தார். அப். 1ம் அதிகார மானது, அதில் உள்ள சம்பவங்கள் நடந்து முடிந்து குறைந்தது முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு எழுதப்பட்டதாலும், அப்பொழுது பவுல் அப்போஸ்தலராகி நீண்ட நாட்கள் ஆகியிருந்தபடியாலும், அப்படிப்பட்ட தவறு நேர்ந்திருந்தால் அதைச் சுட்டிக்காட்டுவது லூக்காவுக்கு எளிதாய் இருந்திருக்கும். தவறு ஒன்றும் நடக்கவில்லை. மத்தியா "பதினோரு பேரோடு சேர்த்துக் கொள்ளப்பட்டான்"; அவர், "அவர்களது எண்ணிக்கையில் ஒருவரானார்"; பன்னிரெண்டில் ஒருவரானார். [33]இன்னொரு பாரம்பரிய வரலாற்றில், அவர் எழுபதில் ஒருவராக இருந்தார் (லூக். 10:1) என்னப் படுகிறது. அநேகமாக இது உண்மையாய் இருக்கலாம், ஏனெனில் தேர்வு செய்யப்பட்டவர் இயேசுவின் ஊழிய நாட்கள் முழுவதிலும் அவரோடு கூடப் பயணம் செய்தவராயிருக்க வேண்டும்.

# பிரசங்கிப்பதற்கும் போதிப்பதற்கும் வேண்டிய உதவிகள்




*எருசலேமின் வரைபடம்*